# உள்ளாட்சி மன்றங்களுக்கான

# மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்

# சுருக்கம்

## தொகுதி I

# உள்ளாட்சி மன்றங்களுக்கான

# மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்

# சுருக்கம்

# பகுதி – 1

## முன்னுரை – ஆய்வுமுறை ஆகியவை பற்றிய சுருக்கம்

# பொருள் அட்டவணை


| பகுதி எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I. | முன்னுரை மற்றும் ஆய்வு முறை | 1 – 5 |
| II. | நிதி ஆதாரங்களைப் பெருக்குதல் | 6 – 45 |
| III. | குடிமைப் பணிகள் மேம்பாடு | 46 – 58 |
| IV. | செயலாக்க அமைப்பை சீரமைத்தல் | 59 – 70 |
| V. | நிதி ஆதார ஒதுக்கீட்டு முறை | 71 – 84 |

# முன்னுரை – ஆய்வுமுறை ஆகியவை பற்றிய சுருக்கம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 73–வது மற்றும் 74–வது திருத்தங்கள்படி, உள்ளாட்சி மன்றங்களின் ஆட்சி முறை, ஒரு புதிய யுகத்தில் அடியயெடுத்து வைக்கக் கட்டியங் கூறுகின்றது. முதற்கண், இத்திருத்தங்கள், செயலுக்கு வந்த ஓராண்டிற்குள் அனைத்து மாநிலங்களிலும், மாநில நிதி ஆணையத்தை ஏற்படுத்தவும் , அதன் பிறகு, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையத்தை ஏற்படுத்தவும் வகைசெய்கின்றன. அதற்கிணங்க, தமிழ்நாடு அரசு, நிதித்துறையின் 23.4.94 ஆம் நாளிட்ட, 350ஆம் எண் அரசாணையிலும் , நிதித் துறையின் 6.12.94ஆம் நாளிட்ட 970 ஆம் எண் அரசு ஆணையிலும், மாநில நிதி ஆணையத்தை அமைத்தும் அதன் ஆய்வு வரம்புகளை வரையறுத்தும், இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டது.

தமிழ்நாடு மாநில நிதி ஆணையம், பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு 1995 ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து முழு அளவில் செயல்படத் தொடங்கியது:–

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு ரெ. .ஆறுமுகம், இ.ஆ.ப .,(ஓய்வு) | – | தலைவர் |
| 2. | திரு குழ. செல்லையா | – | அலுவல் சாரா உறுப்பினர் |
| 3. | நகராட்சி நிருவாக ஆணையர் | – | பதவிநிலையால் உறுப்பினர். |
| 4. | ஊரகவளர்ச்சி இயக்குநர் | – | பதவிநிலையால் உறுப்பினர் |
| 5. | உறுப்பினர் செயலர்<br>மாநில நிதி ஆணையம் | – | உறுப்பினர். |

இந்த ஆணையம், இம்மாநிலத்திலுள்ள ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களான மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை பரிசீலித்து, அவற்றின் நிதிகளை மேம்படுத்;த 1.4.97 லிருந்து ஐந்தாண்டு கால அளவிற்குரிய பரிந்துரைகளை அளிக்க வேண்டும்.

தமிழ்நாடு மாநில நிதி ஆணையம் பின்வரும் ஆய்வு முறையினைப் பின்பற்றி, தன் பணியைத் தொடங்கியது.

1. வினாப்பட்டியல் : தேசிய, மாநில அளவிலான திட்டக் குழுக்களுடன் கலந்து ஆலோசித்து தயாரிக்கப்பட்டு, வினாப்பட்டியல்கள் கள அளவில் சோதிக்கப்பட்டு, பின்பு

   (a) இம்மாநிலத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும்,

   (b) தெரிந்தெடுக்கப்பட்ட பெருமக்களுக்கு அதாவது நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வல்லுநர்கள், புகழ்பெற்ற நபர்கள் மற்றும் உள்ளாட்சி நிருவாகத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள் ஆகியோருக்கும்,

(c) ஆர்வமுள்ள பொதுமக்களுக்கும்,

(d) அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், வட்டாட்சியர்களுக்கும், அனுப்பிவைக்கப்பட்டு அவர்களிடமிருந்து புள்ளி விவரங்களையும் கருத்துக்களையும், கருத்துரைகளையும் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

2. விரிவான ஆய்வு : சென்னை பொருளாதாரக் கல்வியியல் நிறுவனம் தயாரித்த வினாப்பட்டியல்கள் மூலம், அனைத்து வகையான , ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் உள்ள வரிசெலுத்துவோர், மற்றும் பயன் அடைவோரின் கருத்துக்களைப் பெறுவதற்காக அரசுசாரா சிலஅமைப்புகள் மூலம் எட்டு மாவட்டங்களில், விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

3. புள்ளி விவரப் பதிவு : நிரப்பப்பட்ட வினாப் பட்டியல்கள் மூலம் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களை, சென்னை அரசு புள்ளி விவர தகவல் மையத்திலுள்ள கணினிகளில் பதிவு செய்து, மீண்டும் பெறப்பட்டன.

4. புள்ளி விவரங்களின் வகைப்பாடு : வெவ்வேறு வினாப் பட்டியல்களிலிருந்து பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்கள் சென்னை பொருளாதாரக் கல்வியியல் நிறுவனத்தலைவர் டாக்டர் ராஜா செல்லையா அவர்கள் உதவியால் வகைப்படுத்தப்பட்டன.

5. பணிக்குழுக்கள் : சிறப்புத் தன்மை வாய்ந்த அம்சங்கள் குறித்து நுணுக்கமாகஆய்வு செய்யவும் நிதி ஆணையத்திற்கு ஆலோசனைகள் நல்கவும், பின்வரும் பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டன :

a. **நிதிநிருவாக ஆராய்ச்சி நிறுவனம், சென்னை** உள்ளாட்சி மன்றங்களின் வருவாயைப் பெருக்குதல்;

b. **கிர்லோஸ்கர் கன்சல்டன்ஸ், சென்னை:** முக்கியக் குடிமைப் பணிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்புப்பணிகள்; குறித்த வரை முறைகளும், செலவினமும், தனியார் மயமாக்க வாய்ப்புள்ள துறைகள் கண்டறிதல்;

c. அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை:

உள்ளாட்சி மன்றங்களின் அமைப்பும், அதிகாரங்கள் பற்றியதும்;

6. ஏனைய மாநிலங்களுக்குச் செல்லுதல் : கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா, புதுடெல்லி ஆகிய மாநிலங்களுக்குச் சென்று, அங்குள்ள நடை முறைகளையும் அவர்களுடைய கருத்துக்களையும் அறிந்து வரலாயிற்று.

7. ஏனைய நிறுவனங்களுக்குச் செல்லுதல் : மும்பை அனைத்திந்திய உள்ளாட்சி நிறுவனம், ஐதராபாத், ஊரக வளர்ச்சி தேசிய நிறுவனம், புதுடெல்லி, தேசிய பொதுநிதி மற்றும் கொள்கை நிறுவனம் ஆகியவற்றிற்குச் சென்று அவர்களுடன் உள்ளாட்சி மன்றங்களின் நிதி மற்றும் சேவைப் பணிகளின் நிலையை மேம்படுத்த கலந்தாலோசித்து கருத்துக்கள் பெறப்படடது.

8 தேசிய அளவிலான கருத்தரங்குகள் : உள்ளாட்சி மன்றங்களின் செயல்பாடு குறித்த தேசிய அளவிலான கருத்துக்களையும் ஏனைய மாநிலங்களில் அவை செயல்படும் விதம் குறித்து ஆழ்ந்து அறியவும் ஐதராபாத், முசௌரி,புதுடில்லி ஆகிய இடங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான மாநாட்டில் இவ் வாணையம் கலந்து கொண்டது..

9. மாநில அளவிலான கருத்தரங்குகள் மாநகராட்சிகள், மற்றும் நகராட்சிகளின் ஆணையாளர்கள், அளவிலும் பேரூராட்சிகளின் நிருவாக அலுவலர்கள் அளவிலும் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்வதற்காக மாநில அளவில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

10. சென்னையில் தேசிய மாநாடு : தேசிய அளவிலான கொள்கைவகுப்போர் நிருவாகிகள், வல்லுநர்கள், களப்பணி நிருவாகஅலுவலர் ஆகியோருடன் கலந்து விவாதிப்பதற்காக எம்.எஸ்.சாமிநாதன் ஆராய்ச்சி மையம், சென்னை பொருளாதாரக் கல்வியியல் நிறுவனம் ஆகியவற்றோடு மாநில நிதி ஆணையம் இணைந்து சென்னையில் தேசியமாநாடு நடத்தப்பட்டது.

11. செயலர்களுடன் ஆலோசனை : அரசியலமைப்பு 73/74 வது திருத்தச் சட்டங்களின்ன் 11/12 வது விவர அட்டவணைகளின்படி உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி, பணிகள், பணியாளர்களைப் பகிர்ந்தளிப்பது குறித்து விவாதிப்பதற்காக, தமிழ்நாடு அரசின் 17 செயலர்கள் மற்றும் அவர்களுடைய துறைத் தலைவர்களுடன் விரிவான முறையில் கலந்தாய்வு செய்து விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

12. நிதிகள் திரட்டுதல், பயன்படுத்துதல் : மேலும் அதிக நிதி ஆதாரங்களைத் பற்றி கலந்துரையாடல் திரட்டுவது குறித்தும், 2002 வரையில் வெவ்வேறு சேவை இனங்களுக்கான யூனிட் செலவுகளை மதிப்பிடுவது குறித்தும் தொடர்புடைய முகவரமைப்புகளுடன் கலந்து ஆலோசிக்கப்படடது.

13. ஒருங்கிணைப்புத்துறைகளுடன் : நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வது குறித்தும், உள்ளாட்சி மன்றங்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஊரக வளர்ச்சித்துறை , நகராட்சி நிருவாகம், மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நிதித்துறை ஆகியவற்றின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது..

14. உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பணியாளர்களுடன் : ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கு ஓய்வூதியம் பெறுவோர் சங்கம், மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆய்வாளர் ஆகியோருடன் விரிவாக விவாதிக்கப்பட்டது.

15. நேரிட ஆய்வு : சொத்துக்களைப் பராமரிப்பதிலும் குடிமைப் பணிகளை மேம்படுத்துவதிலும் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை மதிப்பிடுவதற்கு சில உள்ளாட்சி மன்றங்களுக்கு நேரடியாகச்சென்று நிதி ஆணையம் பார்வையிட்டது.

16. மாவட்ட அமர்வுகள் : தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட அமர்வுகள் நடத்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,உள்ளாட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள் ஆகியோரின் கருத்துக்கள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 17. மாவட்ட ஆட்சியர், ஏனைய முதுநிலை அலுவலர்களுடன் அமர்வுகள் | : | உள்ளாட்சி மன்றங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த கருத்துக்களை மூத்த அலுவலர்களுடனும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் ஏழு மாவட்டங்களில் கலந்து ஆலோசித்து விவாதிக்கப்பட்டது. |
| 18. நிதி ஆணையத்தின் அமர்வுகள் | : | நிதி ஆணையதின் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யும், இறுதியாக உருவான முடிவுகளை ஏற்பளிப்பதற்காகவும், நடைபெற்ற அமர்வுகளுடன் சேர்த்து மொத்தம் 9 அமர்வுகள் நடத்தப்பட்டன. இம்முடிவுகள் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. |